# கூட்டணி தேவையில்லை என்ற கோரிக்கையைப் பரிசீலிப்போம்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை!... முதல் பக்கத் தொடர்ச்சி

நிறைவேற்றி இருக்கிறார். அதற்குப் பிறகு, 2016இல் கீழ்வேளூர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியிருக்கிறார். அதற்குப் பிறகு, 2021இல் ஆறாவது முறையாக என்னுடைய தலைமையில் ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, 2022இல் தாட்கோவின் தலைவராக இருந்து, அவர் பணியாற்றி இருக்கிறார்.

இவ்வாறு கழகத்திலும், மக்கள் பணியிலும் மட்டுமல்ல; கழகத்திற்கு ஏற்படும் எந்தச் சோதனையாக இருந்தாலும், அதையும் தாண்டி அவர் தன்னுடைய கடமையை நிறைவேற்றி இருக்கிறார்.

நேற்று முன்தினம் கூட நீங்கள் எல்லாம் டி.வி.யில் பார்த்திருப்பீர்கள். ஒரு காட்சி நடந்தது. அதைப் பற்றி எல்லாம் நம்முடைய முத்தரசன் அவர்களும் குறிப்பிட்டுச் சொன்னார். மற்றவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நாட்டில் இன்றைக்கு எத்தனையோ பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கிறது. ஒரு பக்கம், மின்வெட்டு பிரச்சினை; இன்னொரு பக்கம், டெல்டா மாவட்டத்தில் விவசாயிகளுக்குக் குறித்த நேரத்தில் தண்ணீர் திறந்து விட முடியவில்லை என்ற சூழ்நிலை.

### மேட்டூர் அணையை குறித்த நேரத்தில் திறந்தோம்!

நீங்கள் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும்... 2021க்கு பிறகு 5 ஆண்டுகள் நாம் ஆட்சி பொறுப்பில் இருந்தபோது ஒவ்வொரு ஆண்டும் நாம் தவறாமல் மேட்டூர் அணையைக் குறித்த நேரத்தில், குறித்த நேரத்திற்கு முன்பேகூட திறந்து வைத்திருக்கிறோம். அதுதான் நம்முடைய ஆட்சி!

இதையெல்லாம் எடுத்துச் சொல்லி எதிர்க்கட்சியின் தலைவராக இருக்கும் நம்முடைய உதயநிதி அவர்கள் விளக்கமாக விரிவாக சட்டமன்றத்தில் பேசி, இருக்கும் சூழ்நிலைகளை எல்லாம் எடுத்துச் சொல்லி, அதன் மூலமாக முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று கேட்டிருக்கிறார்.

ஆனால் சட்டமன்றத்தில் முதலமைச்சராக இருக்கக்கூடியவர் என்ன பதில் சொன்னார்?

“எங்கே காணோம்?” “உங்க அப்பாவைக் காணோம்” என்று சொல்லி இருக்கிறார்.

அப்பாவை அங்கே தேடாதீர்கள். மக்கள் மனதில் பதிந்திருக்கிறான். அது போதும். நீங்கள் தேடும் இடத்தில் நான் இருக்க மாட்டேன். மக்கள் தேடும் இடத்தில் நிச்சயமாக நான் முதல் ஆளாக நிற்பேன். நான் சட்டமன்றத்தில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், இன்றைக்கு நான் மக்கள் மன்றத்தில் இருக்கிறேன் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்கிறேன்.

### அதிக அளவில் ஆய்வுக் கூட்டங்களை நடத்தியுள்ளேன்!

நான் அரசியலுக்கு வந்து கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் ஆகி இருக்கிறது. 60 ஆண்டுகளாக மக்களோடு மக்களாகத்தான் இருந்து கொண்டிருக்கிறேன். ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நாட்டு மக்களுக்காகப் பணியாற்றக் கூடியவர்கள் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் .

நான் முதலமைச்சராக இருந்த போது ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான்கு ஐந்து முறை சென்று ஆய்வு நடத்தி, இன்னும் சொல்கிறேன்... நான் முதலமைச்சராக இருந்த 5 ஆண்டுகளில், நான் நடத்தியது போன்று ஆய்வுக் கூட்டங்களை எந்த முதலமைச்சரும் நடத்தி இருக்க மாட்டார்கள். நான் பயணம் செய்தது போன்று, எந்த முதலமைச்சரும் பயணம் செய்திருக்க மாட்டார்கள். நான் கோட்டைக்குச் சென்றதுதான் அதிகமாக இருந்திருக்கும்.

இன்னும் கூட சொல்கிறேன், இன்றைக்கு இருக்கும் முதலமைச்சர் தேடிப் பார்க்க வேண்டும் என்றால், நான் அவரைக் கேட்டுக் கொள்கிறேன்... கோட்டையில் தான் கோப்புகள் எல்லாம் இருக்கின்றன. எனவே, அந்தக் கோப்புகளை எல்லாம் எடுத்துப் பாருங்கள். அதில் நான் கையெழுத்து போட்டிருப்பேன், ‘மு.க.ஸ்டாலின், மு.க. ஸ்டாலின்’ என்று. அதனால் நீங்கள் தேடிப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை. அந்தக் கையெழுத்தைப் பாருங்கள். அதில் தெரியும் உங்களுக்கு.

மகளிருக்கு கலைஞர் உரிமைத் தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்று கையெழுத்து போட்டிருப்பேன். அங்கே ஸ்டாலின் இருப்பான். புதுமைப்பெண் திட்டத்தின் மூலமாக மாதாமாதம் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்ற கோப்பைப் பாருங்கள். அதிலும் மு.க. ஸ்டாலின் கையெழுத்து போட்டிருப்பான். தமிழ்ப்புதல்வன் திட்டம் ஆயிரம் ரூபாய். அதிலும் ஸ்டாலின் இருப்பான். எனவே நீங்கள் எங்கும் தேடிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை. கோட்டையிலேயே இருக்கிறேன். நான்தான் ஆட்சியில் இருக்கிறேன்.

### திட்டங்கள் உள்ளவரை ஸ்டாலின்தான் முதல்வர்!

இன்னும் சொல்கிறேன், அண்ணா ஒரு முறை சொன்னார். தமிழ்நாட்டிற்கு ‘தமிழ்நாடு’ என்று பெயரைச் சூட்டி இருக்கிறேன். எனக்கு வாழ்க்கையில் இது போதும். எனவே, நான் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் ‘தமிழ்நாடு’ என்று பெயர் சொல்லும் வரை, என்னுடைய பெயர் இருக்கும் என்று சொல்லி இருக்கிறார்.

அதுபோன்று, மகளிர் உரிமைத் திட்டம் இருக்கும் வரைக்கும் இந்த ஸ்டாலின்தான் முதலமைச்சர். இவ்வாறு சொல்லிக் கொண்டே இருக்கலாம்.

இங்கே நம்முடைய மதிப்பிற்குரிய துணைப் பொதுச் செயலாளர் சகோதரர்

ஆ. இராசா அவர்கள் பேசுகிற போது, கூட்டணி பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். எப்போதுமே கலைஞர் அவர்கள் கூட்டணி அமைத்தால், அந்தக் கூட்டணியைப் பாதுகாப்பாக வைத்திருப்பார். அவர்களாகத்தான் செல்வார்களே தவிர, கலைஞர் இதுவரை விட்டது கிடையாது என்று குறிப்பிட்டார். அதேபோன்றுதான் நானும் அவர் வழி நின்று, எந்தக் கூட்டணியாக இருந்தாலும் விடமாட்டேன். ஆனால் அவர்களாகச் சென்றால், நான் ஒன்றும் சொல்ல முடியாது. அதுதான் என்னுடைய கடமை.

### கூட்டணி குறித்து விரைவில் பரிசீலனை!

ஆனால் இன்றைக்கு இருக்கும் மக்கள் எல்லாம், கூட்டணியே தேவை இல்லை என்றுதான் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக அதையும் நாங்கள் விரைவில் பரிசீலிப்போம், பரிசீலிப்போம், பரிசீலிப்போம் என்பதை மாத்திரம் எடுத்துச் சொல்லி, மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்கள் வாழ்க்கையில் எல்லா நன்மைகளையும் பெற்று சிறப்போடு வாழ்வாங்கு வாழ்ந்து, புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எடுத்துச் சொல்லி இருக்கும், “வீட்டிற்கு விளக்காய், நாட்டிற்குத் தொண்டர்களாய்” வாழுங்கள், வாழுங்கள், வாழுங்கள் என்று வாழ்த்துகிறேன்.

அதேநேரத்தில் மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள். உங்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு அழகான தமிழ்ப் பெயர்களைச் சூட்டுங்கள் என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, விடைபெறுகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; முதல்வர் விஜய்யின் தனிச் செயலாளராக, அவரது சினிமா மேலாளராக இருந்த ஜெகதீஷ் என்பவர் நியமனம் செய்யப் பட்டிருப்பதை, “முதல்வரின் உதவியாளர் நியமனம் 40 நாட்களாக மறைத்த அரசு” என்று நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளதே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; ஜெகதீஷ் மே 12 அன்றே நியமிக்கப்பட்டிருந்தாலும், 40 நாட்கள் மறைக்கப்பட்டு, ஜூன் 22 அன்றுதான் அந்த அரசாணை விபரம் வெளிவந்திருக்கிறது.**

**விஜய் உறுதி அளித்த ‘வெளிப்படையான அரசு’ என்பதற்கு விளக்கம் இதுதான் !**

---

### ஆபாச சைகை காட்டி

# பெண்ணுக்கு டார்ச்சர் - த.வெ.க. நிர்வாகி மீது வழக்கு!

## மேலும் பலருக்குத் தொந்தரவு!

கம்பம், ஜூன் 27 –

தேனி மாவட்டம், கம்பத்தில் உள்ள ஒரு பகுதியைச் சேர்ந்த 43 வயது மதிக்கத்தக்க பெண், தனது பெண் குழந்தையுடன் வசித்து வருகிறார்.

அப்பெண்ணின் கணவர் இறந்துவிட்ட நிலையில், ரெடிமேட் துணி கம்பெனியில் பணிபுரிந்து வருகிறார்.

அப்பெண்ணின் வீட்டின் அருகே த.வெ.க. தொழிற்சங்க நிர்வாகி ஆட்டோ ஓட்டுநர் பாபு (எ) ஆசிக் பாபு (38) என்பவர், மனைவி, குழந்தையுடன் வசித்து வருகிறார்.

ஆசிக் பாபு அப்பெண் பணிக்கு செல்லும்போது, ஆபாசமாக பேசுவது, ஆபாச சைகை செய்வதுமாக டார்ச்சர் செய்து வந்துள்ளார்.

இதுகுறித்து, அப்பெண் அளித்த புகாரின் பேரில், ஆபாசமான செயலில் ஈடுபட்டது உள்பட 3 பிரிவுகளின் கம்பம் தெற்கு போலீசார் பாபு (எ) ஆசிக் பாபு மீது வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

தகவலறிந்து ஆசிக் பாபு, மனைவி, குழந்தை யுடன் தலைமறைவாகி விட்டதாகவும், அவர்களை தீவிரமாக தேடி வருவதாகவும் போலீசார் தெரிவித்தனர்.

சமீப காலமாக த.வெ.க. ஆட்சியில் பெண்கள் மற்றும் குழந்தைகள் மீதான் குற்றங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில், தவெக நிர்வாகி ஆசிக் பாபு மீதும் 3 பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் தலைமறைவாக இருக்கும் ஆசிக் பாபுவை விரைவில் கைது செய்ய வேண்டும். அவரால் மேலும் பல பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுவதால், போலீசார் முறையாக விசாரணை செய்ய வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மாணவிகளிடம் சில்மிஷம்; போதை ஆசாமிக்கு தர்மஅடி!**

திண்டுக்கல் பஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் பள்ளி முடிந்து வீட்டிற்கு செல்வதற்காக ஏராளமான மாணவிகள் நின்று கொண்டிருந்தனர். அப்போது அங்கு வந்த ஒருவர், மாணவிகளிடம் சில்மிஷத்தில் ஈடுபட்டுள்ளார். இதையடுத்து அங்கு நின்று கொண்டிருந்த பயணிகள் அவரை மடக்கி பிடித்து தர்ம அடி கொடுத்து, திண்டுக்கல் நகர் வடக்கு போலீசில் ஒப்படைத்தனர்.

விசாரணையில் சில்மிஷத்தில் ஈடுபட்டவர் திண்டுக்கல் குமரன் திருநகரைச் சேர்ந்தவர் ராஜா (42) என்பதும், மது போதையில் மாணவிகளிடம் சில்மிஷத்தில் ஈடுபட்டதும் தெரிய வந்தது. இதையடுத்து போலீசார் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

---

### அரசுக்கு எதிராக விமர்சனங்களைப் பதிவிடும் ஒருவரைத் தடுக்க நினைத்தால்

# லட்சம் பேர் அதே செய்தியை வெளியிடுவோம்!

## தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி எச்சரிக்கை!

*சென்னை, ஜூன் 27 -*

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களிடம் கூறியதாவது: -



முதலமைச்சர் விஜய் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நாள் முதல், மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் எவ்வித அக்கறையும் காட்டாமல் இருக்கிறார்.

அவரது ஆட்சியில் அரங்கேறி வரும் கோர சம்பவங்கள் மற்றும் பாலியல் குற்றங்கள் குறித்து அவர் இதுவரை வாய் திறக்கவில்லை; முறையான பதிலும் சொல்லவில்லை. இன்ஸ்டாகிராம் மற்றும் சமூக வலைதளங்கள் மூலமாகவே ஆட்சிக்கு வந்தவர் விஜய்.

கடந்த காலங்களில் அவர் பேசிய கருத்துக்களுக்காக, தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது வழக்குத் தொடர்ந்திருந்தால், அவர் அரசியலை விட்டே ஓடியிருப்பார்.

சைதாப்பேட்டையில் தி.மு.க.வைச் சேர்ந்த ‘ஜென்சி’ இளைஞர் ஒருவர் தாக்கப்பட்ட விவகாரத்தில் புகார் அளித்து 3 நாட்கள் ஆகிறது. ஆனால், இதுவரை காவல்துறை வழக்குப் பதிவு செய்யவில்லை. இன்னும் 24 மணி நேரத்திற்குள் காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்யவில்லை என்றால், தி.மு.க. சார்பில் சைதாப்பேட்டை காவல் நிலையம் முன்பு மாபெரும் போராட்டம் நடத்தப்படும்.

தமிழக வெற்றிக் கழக அரசுக்கு ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், தி.மு.க. இதுபோன்ற பூச்சாண்டிகளுக்கு எல்லாம் ஒருபோதும் பயப்படாது. ஜென்சி இளைஞர்கள் தி.மு.க.வை நோக்கி வருவதை விஜய்யால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. விஜய் சட்டப்பேரவையில் ஆடியது போல வெளியிலும் ஆட முடியாது. த.வெ.க. ஆட்சியில் ஒரே இரவில் பாலியல் குற்றம் செய்தவர்களை இந்த அரசு கைது செய்ததா?. ஆனால், இரவு 10 மணிக்கு சமூக வலைதளத்தில் பதிவிட்டவரை, 12 மணிக்கே சென்று பிடிக்க காவல்துறை துடிக்கிறது.

ஜென்சி இளைஞர்கள் பேசுவதைக்கூட முதலமைச்சரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. திருடனை பிடிப்பது போல காவல் துறையினர் வீடுகளுக்கு செல்கிறார்கள்.

சமூக வலைதளத்தில் ஒரு செய்தியை வெளியிட ஒருவரை தடுத்தால், அதே செய்தியை ஒரு லட்சம் பேர் வெளியிடுவோம். தி.மு.க. என்பது அடக்குமுறைகளையும், ‘மிசா’வையும் பார்த்த கட்சி என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

---

### தமிழ்நாட்டில் தொழிற்சாலைகள் தொடங்க

# தி.மு.க. அரசு நேர்மையாகச் செயல்பட்டது!

## ஆந்திர அமைச்சர் நாரா லோகேஷ் பாராட்டு!

*திருமலை, ஜூன் 27 -*

தமிழகத்தில் தொழிற்சாலைகளை தொடங்க தி.மு.க. அரசு நேர்மையாக செயல்பட்டது என ஆந்திர மாநில அமைச்சர் நாரா லோகேஷ் பாராட்டு தெரிவித்துள்ளார். தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியில் இருந்தபோது ஏராளமான தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டன. இதனால் லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். ஆனால் பல தொழிற்சாலைகள் அண்டை மாநிலத்திற்கு சென்றுவிட்டது. அதற்கு தி.மு.க. அரசுதான் காரணம் என த.வெ.க. அரசு கூறி வருகிறது.



இந்நிலையில் ஆந்திராவில் நேற்று முன்தினம் நடந்த தனியார் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அம்மாநில கல்வி மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் நாரா லோகேஷ் பேசியதாவது:

‘ஆந்திராவில் முதலீடுகளை ஈர்க்க, தமிழ்நாட்டில் முந்தைய தி.மு.க. அரசுடன் நாங்கள் கடுமையாக போட்டியிட்டோம். சிலவற்றில் வென்றோம். சிலவற்றில் தோற்றோம். ஆனால் தி.மு.க. அரசாங்கம் தங்களிடம் பணம் கேட்பதாக ஒரு முதலீட்டாளர் கூட எங்களிடம் புகார் செய்வதை நான் கேட்டதில்லை.

தி.மு.க. அரசு ஒரு நேர்மையான மற்றும் தொழில்முறை முதலீட்டு செயல்முறையை நடத்தியது. அதற்கு தி.மு.க. அரசுக்கு பாராட்டுக்கள்’ என்றார்.

தி.மு.க. ஆட்சியில் ஊழல் நடந்ததாக த.வெ.க.வினர் பேசி வரும் தற்போதைய நிலையில், ஆந்திர மாநில அமைச்சர், முந்தைய தி.மு.க. அரசை பாராட்டி உள்ளது சமூக வலைதளத்தில் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அலமேலு அப்பாதுரை

**ஜூன் 27 (2001)**



**தி.மு.க. மகளிர் அணிச் செயலாளராகவும் – தலைமை நிலையச் செயலாளராகவும் – தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும் – சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**தி.மு.க. மகளிர் அணியினைச் சிறப்பாக கட்டிக் காப்பாற்றியவர்.**

**1938ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தித் திணிப்பு எதிர்ப்புக் கிளர்ச்சியிலும், பின்னர் நடைபெற்ற கறுப்புக் கொடி போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம் உள்ளிட்ட பல்வேறு அறப்போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.